# துவாக்குடி நகராட்சி

| Date of Meeting of the Council | MCR No. | Serial Number and subject in the Agenda | Decision of Council |
|---|---|---|---|
| 02.02.2018 | | **2017ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 2–ம் தேதி வெள்ளிக்கிழமை காலை 10.30 மணிக்கு துவாக்குடி நகராட்சி அலுவலகத்தில் கீழ்கண்ட பொருள்கள் குறித்து ஆலோசித்து முடிவெடுக்க சாதாரணக் கூட்டம் நடைபெறும்.**<br>**தனி அலுவலர்,**<br>**துவாக்குடி நகராட்சி.** | |
| 02.02.2018 | 142 | **<u>பொருள் எண். 1</u>**<br>தமிழ்நாடு மறுவரையறை ஆணையர், சென்னை அவர்களின் கடித ந.க.எண். 3174/2017/தே.பே.1 நாள். 13.12.2017 ல் தெரிவிக்கப்பட்டுள்ள படி துவாக்குடி நகர்மன்ற வார்டுகள் 21 எண்ணிக்கை தயாரிக்கப்பட்டு வரைவு வார்டு மறுவரையறை கருத்துருக்கள் 29.12.2017 அன்று பொது மக்களின் பார்வைக்கு வெளியிடப்பட்டது. மேற்படி வரைவுகள் மீதான ஆட்சேபனைகள் மற்றும் கருத்துருக்கள் பொது மக்களிடமிருந்து பெறப்பட்டு மேற்படி ஆட்சேபனைகள் மற்றும் கருத்துருக்களை தமிழ்நாடு மறுவரையறை ஆணையர் தலைமையில் 29.01.2018 அன்று நடைபெற்ற மண்டல அளவிலான ஆய்வுக்கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகளின் படி உரிய திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு இறுதி செய்யப்பட்ட வார்டு மறுவரையறை கருத்துருக்கள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு:** வரைவு மறுவரையறை கருத்துரு இறுதி செய்யப்பட்டுள்ளதை ஏற்று மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.<br>**ந.க.எண்.1012/2017/சி1** | **அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |
| 02.02.2018 | 143 | **<u>பொருள் எண். 2</u>**<br>திருவெறும்பூர் சட்ட மன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி திட்டம் 2017–18 ம் ஆண்டிற்கு துவாக்குடி நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு பகுதிகளில் 7 குடிநீர் பணிகள் மேற்கொள்ள திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறை உத்திரவு ந.க.எண். செ.மு.ஆ.எண். 1814/2017/அ3 நாள். 20.08.2017 – ல் நிர்வாக அனுமதி வழங்கியுள்ளதை தொடர்ந்து கீழ்கண்ட 7 குடிநீர் பணிகள் மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி விளம்பரத்தினை 15.09.2017–ம் தேதி மக்கள் குரல் தினசரி நாளிதழில் விளம்பரம் செய்தமைக்கு பிரைட் அட்வர்டைசிங் நிறுவனத்தின் பில் பட்டியல் படி ரூ. 10,080/– வழங்குவதற்கு மன்றத்தின் அனுமதிக்கு.<br>**ந.க.எண். 752/2017/இ1**<br>**அலுவலக குறிப்பு : –** மன்றம் அனுமதி வழங்கலாம். | **அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |

| | | | |
|---|---|---|---|
| 02.02.2018 | 144 | **<u>பொருள் எண். 3</u>**<br>துவாக்குடி நகராட்சி பகுதிகளில் திடக்கழிவு மேலாண்மை திட்டம் செயல்படுத்த துவாக்குடி நகராட்சியில் போரிய இடவசதி இல்லாததால் திருவெறும்பூர் வட்டம் துவாக்குடி கிராமம் புல எண். 281 விஸ்தீரணம் 4.09.5 ஹெக்டேர் வண்டிப்பாதை புறம்போக்கு என பதிவுகள் உள்ளதை அரசாணை எண். 114 நாள். 28.02.2011 வருவாய் (நி மு 5(1)) துறையில் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு நிலக்கிரையமின்றி பெற்றுக் கொள்ள திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் அனுமதி கோர மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது<br>**ந.க.எண். 183/ 2016/எப்1**<br>**அலுவலக குறிப்பு : –** நகரின் வளர்ச்சியை கருத்தில் கொண்டு திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் அவசியம் கருதியும் மன்றம் அனுமதி வழங்கலாம். | **அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |
| 02.02.2018 | 145 | **<u>பொருள் எண். 4</u>**<br>திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் டாக்டர் எம்ஜிஆர் நூற்றாண்டு விழா 26.10.2017–ம் தேதி நடைபெற உள்ளதை தொடர்ந்து துவாக்குடி நகராட்சியில் 2011 ம் ஆண்டு முதல் 2016 ம் ஆண்டு வரை மேற்கொள்ளப்பட்ட பணிகள் மற்றும் நலத்திட்ட பணிகள் விரத்தினை தினசரி நாளிதழில் வெளியிட திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் கடிதம் ந.க.எண். 269/செ.ம.தொ/2017 நாள். 21.10.2017– ல் தெரிவித்துள்ளதை தொடர்ந்து தமிழ் நியூஸ் தினசரி நாளிதழில் 26.10.2017–ம் தேதி விளம்பரம் வெளியிடப்பட்டதற்கு தமிழ் நியூஸ் சென்னை நிறுவனத்திடமிருந்து வரப்பெற்ற பில் பட்டியல் தொகை ரூ. 21000/– ம் மற்றும் தின இதழ் சென்னை நிறுவனத்திடமிருந்து வரப்பெற்ற பில் பட்டியல் தொகை ரூ. 15000/– ம் ஆக மொத்தம் ரூ. 36000/–தொகை வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு:-** மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>**ந.க.எண். 1333/2017/இ1** | **அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |
| 02.02.2018 | 146 | **<u>பொருள் எண். 5</u>**<br>துவாக்குடி நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் பொது சுகாதார பிரிவு வாகனங்களை இயக்கு Out Sourcing முறையில் ஓட்டுநர்கள் சப்ளை செய்ய 28.03.2017–ம் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு அதில் குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்த திரு. எம். ஜீவானந்தம் ஒப்பந்தாரருக்கு வேலை உத்திரவு வழங்கி பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்நிலையில் 2018–19 ம் ஆண்டிற்கு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் தினக்கூலி பட்டியல் வரப்பெறாத காரணத்தினால் பழைய 2017–18 ல் மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தை நீட்டிப்பு செய்து அக்டோபர் 2018–ம் மாதம் வரை பணி | **அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |

| | | | |
|---|---|---|---|
| | | மேற்கொள்ள அனுமதி கோரி ஒப்பந்தாரர் கொடுத்த கடிதம் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.<br><br>**அலுவலக குறிப்பு:- 1.** பணியின் அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2. மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் தினக்கூலி பட்டியலை எதிர்நோக்கியும், பட்டியல் வரப்பெறாதபட்சத்தில் நவம்பர் 2018 மாதம் முதல் ஒப்பந்தப்புள்ளி கோரி பணி மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>**ந.க.எண். 284/2017/எச்1** | |
| 02.02.2018 | 147 | **பொருள் எண். 6**<br><br>துவாக்குடி நகராட்சிக்கு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் 2017–18 ம் ஆண்டுக்கு கீழ்கண்ட இரண்டு குடிநீர் பணிகள் மேற்கொள்ள திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறை உத்திரவு ந.க.எண். செ.மு.ஆ.எண். 1814/2017/அ3 நாள். 23.1.2018 – ல் நிர்வாக அனுமதி வரப்பெற்றது மன்றத்தின் பார்வைக்கும், ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><br>**அலுவலக குறிப்பு:-** மன்றம் அனுமதி வழங்கலாம்.<br><br>**ந.க.எண். 752/2017/இ1** | **அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |

____________ X ____________